UMAR PULAVAR TAMIL LANGUAGE CENTRE
2, BEATTY ROAD
SINGAPORE 209954

**MINISTRY OF EDUCATION**

Telephone: 62980781
Telefax: 62984677

Ref: UPTLC/2016/P001

06 ஜனவரி, 2016

## பொங்கல் விழா 2016

அன்புடைய பெற்றோருக்கு,

வணக்கம். எதிர்வரும் ஜனவரித் திங்கள் 16 ஆம் நாள் (16.01.2016) சனிக்கிழமை காலை 9.00மணி முதல் 1.00மணி வரை உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையத்தில் 'பொங்கல் விழா 2016' என்னும் நிகழ்ச்சி நடைபெறவுள்ளது. இவ்விழாவில் உயர்நிலை 1 முதல் உயர்நிலை 3 வரை பயிலும் மாணவர்கள் அனைவரும் தவறாது கலந்துகொள்ள வேண்டுகின்றோம்.

இவ்விழா, தேசிய நிலையில் நடைபெறவுள்ளது. அதனால், பிற உயர்நிலைப் பள்ளி மாணவர்களும் இவ்விழாவில் பங்கேற்கவுள்ளனர். மேலும், மாணவர்களுக்குப் பொங்கலைப் பற்றிய ஆழமான புரிதலை ஏற்படுத்தவும் அனுபவ வழிக் கற்றலாக அமையும் வண்ணமும் இவ்விழா நன்கு திட்டமிடப்பட்டுள்ளது. பயன்தரும் பல நடவடிக்கைகள் இவ்விழாவில் இடம்பெறவுள்ளன.

இப்பொங்கல் விழா 2016 நிகழ்ச்சியில் தங்கள் மகன்/மகள் தவறாது கலந்துகொண்டு பயனடைய விரும்புகின்றோம். தங்கள் பிள்ளையின் (மகன்/மகள்) வருகையை உறுதி செய்யும் வகையில், கீழே தரப்பட்டுள்ள ஒப்புதல் படிவத்தை/இசைவு முறியை (Reply Slip) நிறைவு செய்து உங்கள் பிள்ளையின் தமிழாசிரியரிடம் ஒப்படைக்குமாறு வேண்டுகிறோம். இந்நிகழ்வு குறித்து மேலும் விவரம் அறிய விரும்பினால் நீங்கள் ஆசிரியர் திரு குருசாமி அவர்களை 62980781 (Ext:513) என்னும் தொலைபேசி எண்ணில் தொடர்புகொள்ளலாம்.
நன்றி!

அன்புடன்
திரு இரா அன்பரசு
நிலைய இயக்குநர்
உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையம்

## Pongal Festival 2016

UPTLC will be organizing the above-mentioned event on 16th January 2016, from 9.00am to 1.00pm. We would appreciate your child's presence during at the event.

-----------------------------------------------------✂-----------------------------------------------------

### இசைவு முறி (REPLY SLIP)

அன்பு ஆசிரியருக்கு,
வணக்கம். உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையத்தில் பயிலும் என் மகன்/மகள் ______________________________(பெயர்), ____________________(தமிழ் வகுப்பு) நிலையத்தில் 16.01.2016 சனிக்கிழமை காலை நடைபெறும் 'பொங்கல் விழா 2016' என்னும் நிகழ்ச்சியில் கலந்துகொள்ளச் சம்மதிக்கிறேன் ☐ / சம்மதிக்கவில்லை ☐.

| ______________________ | ______________________ | ______________ |
|---|---|---|
| பெற்றோர் பெயர் | பெற்றோர் கையொப்பம் | தேதி |